# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8074702

C

1. District மாவட்டம் : விருதுநகர்
   PS: லஒ.த.க. பிரிவு காவல்நிலையம் விருதுநகர்
   Year ஆண்டு 2022 FIR No. மு.த.அ. எண்: 05/2022 Date: நாள் 15.10.2022
2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 102 Crpc and 7 of prevention

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: of Corruption (Amendment)

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 14-10-2022
   Date from : நாள் முதல் 18.15 hrs
   Date to : நாள் வரை 23.00 hrs.

   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15-10-2022
   Time : நேரம் 04.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time : நேரம்
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும்

   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி ஊராட்சித்துறை அலுவலக கட்டிட வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், விருதுநகர் சுமார் 1/2 km தென்கிழக்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. இந்துமாரி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இந்து ராமலிங்கம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16-05-1975
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் / மாவட்ட [illegible] ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர்
   (g) Address : முகவரி ஆதி திராவிட நல அலுவலகம், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், (இருப்பு) இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ந. உமா சங்கர் 51/2022, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக கட்டிட வளாகம், விருதுநகர்.
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

நான் (இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர்) இன்று 15.10.2022 ஆம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்த போது விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.முத்துமாரி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை அலுவலக கட்டிட வளாகத்தில் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அறையில் வைத்து தயார் செய்த திடீர் இணை ஆய்வு அறிக்கை நாள் 14.10.2022 மற்றும் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமா சங்கர், உதவியாளர், திரு.சகேயு மற்றும் அலுவலக உதவியாளர், திரு.நாகராஜ் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.6,50,000/- அந்த பணம் இருந்த துணிப்பை மற்றும் ஒரு ஆவணத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் எம்.முத்துமாரி, (47/2022), தனி வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலன், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், விருதுநகர் மாவட்டம் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 15/10/22

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature]

15. Date & Time of despatch to the court: 15.10.22 at 05.00 Hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN
Rank: நிலை INSP. of POLICE,

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 05/2022 பிரிவு 102 CrPC and 7 of Prevention of Corruption (Amendment) Act 2018ன் தொடர்ச்சி:-** ஐயா, பொருள்: விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், விருதுநகர் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக. நான் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், ஆதி திராவிடர் நலன் தனி வட்டாட்சியராக கடந்த 11.07.2022ம் தேதி முதலும், அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 13.10.2022ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். இன்று 14.10.2022ம் தேதி மதியம் சுமார் 14.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்ட ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆக பணிபுரிந்து வருபவர், பஞ்சாயத்து தலைவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் நிர்வாக அனுமதி உத்தரவு நகல்களை வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சித்துறை தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் லஞ்சமாக/கிப்ட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.பூமிநாதன் மற்றும் காவலர்களுடன் மேற்படி விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் இணை ஆய்வு செய்ய இன்று 14.10.2022ம் தேதி மாலை சுமார் 18.00 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு சென்று, விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்தின் கீழ்தளத்தில் தென்புறம் அமைந்துள்ள ஊரகவளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறைக்கு மாலை சுமார் 18.15 மணிக்குச் சென்று இரவு 23.00 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமா சங்கர் என்பவரிடமிருந்து ரூ.6,08,000/- மற்றும் திரு.உமா சங்கர் அவரது அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.சகேயு என்பவரிடம் கொடுத்து வைத்திருந்த பணம் ரூ.42,000/- ஆக மொத்தம் ரூ.6,50,000/- அலுவலக ரீதியாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களை சந்திக்க வந்த பஞ்சாயத்து தலைவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சிகள் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் லஞ்சமாக/கிப்ட்டாக பெறப்பட்ட லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணமாக கருதி அந்த பணம் மொத்தம் ரூ.6,50,000/-மும், அந்த பணம் இருந்த அழகாய்.. ஆனந்தமாய்... ஆனந்தம் சில்க்ஸ் இராமநாதபுரம் /

கும்பகோணம் /தஞ்சாவூர் / இராஜபாளையம் / புதுக்கோட்டை என ஒருபக்கம் தமிழிலும், மற்றொரு பக்கம் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்ட அடையாளம் உள்ள துணிப்பையும் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக உதவி இயக்குநர் (ஊ) திரு.உமா சங்கர், உதவியாளர் திரு.சகேயு மற்றும் அலுவலக உதவியாளர் திரு.நாகராஜ் ஆகியோர் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் இன்று 14.10.2022ம் தேதி மாலை சுமார் 18.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு. 1) விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், விருதுநகர். 2) ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம். 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 18.15 மணி. 3) ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் திரு.முத்துமாரி, (47/2022), தனி வட்டாட்சியர், (ஆதிதிராவிடர் நலன்), ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், விருதுநகர் மாவட்டம் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் 4) ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர் திரு.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் 5) ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள்: 1) திரு.ந.உமாசங்கர் (51/2022), ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ), ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகம், விருதுநகர், 2) திரு.ரா.சகேயு (53/2022), உதவியாளர், ஊ.வ.உ.இ.அலுவலகம், ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகம், விருதுநகர், 3) திரு.ச.நாகராஜ் (59/2022), அலுவலக உதவியாளர், ஊ.வ.உ.இ.அலுவலகம், ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகம், விருதுநகர். 6) ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த தனிநபர்: இல்லை. விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆக பணிபுரிந்து வருபவர், பஞ்சாயத்து தலைவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் நிர்வாக அனுமதி உத்தரவு நகல்களை வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சித்துறை தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் லஞ்சமாக/கிப்ட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 18.15 மணிக்கு காலம்3 மற்றும் 4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்தின் கீழ்தளத்தில் தென்புறம் அமைந்துள்ள ஊரகவளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையில் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையானது விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்தின் மெயின் நுழைவாயில் வழியே உள்ளே நுழைந்தவுடன் கீழ்தளத்தில் தெற்கு பக்கம் வடக்குவாசலுடன் உள்ள அறையில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி அறைக்கு வெளியே காலம் 5 வரிசை எண்.3 கண்ட நபர் நின்றுகொண்டிருந்தார். உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையில் காலம் 5 வரிசை

எண்.1ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ந.உமா சங்கர் அவர்கள் வடக்கு பார்த்து இருந்த அவரது இருக்கையில் அமர்ந்தும், காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.சகேயு என்பவர், ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு எதிரில் தெற்கு பார்த்து நின்றுகொண்டும் இருந்தனர். மேற்படி உதவி இயக்குநர்(ஊ) அவர்களின் அறையானது குளிரூட்டப்பட்ட அறையாக இருந்தது. அந்த அறைக்குள் நுழைந்தவுடன் மேல்பக்கம் பிளாஸ்டிக் சேர்களும், தென்மேற்கு பகுதியில் கிழக்கு பார்த்த வாசலுடன் கூடிய கழிவறையும் இருந்தது. காலம் 5-ல் கண்ட நபர்களிடம் விபரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண். 1ல் கண்ட உதவி இயக்குநர் (ஊ) திரு.ந.உமா சங்கர் அவர்களையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.14,100/-ம், இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்களும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, சட்டைப் பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.14,100/-ம் அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (14.10.2022) மருத்துவ செலவுக்கு கொண்டு வந்ததாகவும், அந்த பணம் ரூ.14,100/- பற்றி தன்னுடைய அலுவலகத்திலுள்ள ரொக்க கையிருப்பு பதிவேட்டில் தான் இன்று காலை அலுவலகத்திற்குள் வந்த பின்பு பதிவு செய்துள்ளேன் என்றும் கூறினார். எனவே அலுவலகத்திலுள்ள ரொக்க கையிருப்பு பதிவேட்டை அவர் மூலமே பெற்று பார்வையிட்டதில், அந்த பதிவேட்டில் பக்கம் 11-ல் மருத்துவ செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று பதிவு ஆங்கிலத்தில் இருந்தது. ஆகையால் அந்த பணம் ரூ.14,100/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைத்துவிட்டு, உடன் அந்த உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேடு-2022 கைப்பற்றப்பட்டது. பின்னர் இடதுபக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுக்கப்பட்ட கத்தையான 500 ரூபாய் பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 16 எண்ணம் (மொத்தம் ரூ.8,000/-) இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். பின்னர் யோசித்து விட்டு தனக்கு தெரிந்த நெருங்கிய நண்பர்கள் கொடுத்தது என்றும், அவர்கள் பெயர்களை சொல்ல விரும்பவில்லை என்றும், அவர்களை விசாரணைக்கு உட்படுத்த விரும்பில்லை என்றும் சொல்லிவிட்டு மௌனமாக இருந்தார். ஆகையால் அந்த பணம் ரூ.8,000/- அலுவலக ரீதியாக அவரை சந்திக்க வந்த பஞ்சாயத்து தலைவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சிகள் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் லஞ்சமாக/கிப்ட்டாக பெறப்பட்ட லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரிடம், அவரது கைப்பை (பேக்) சம்மந்தமாக கேட்க, கைப்பையை சற்றுமுன் அலுவலக உதவியாளர் திரு.நாகராஜ் மூலம் தான் பயன்படுத்தும் அலுவலக அரசு ஜீப்பில் (TN 67 G 0424) வைத்துள்ளதாகவும், கைப்பையானது அந்த அலுவலக ஜீப்பில் (TN 67 G 0424) இருப்பதாகவும் கூறினார். ஆகையால் அவரை அழைத்துக் கொண்டு, விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திற்கு வெளியே சென்று, போர்டிகோவில் நின்றுகொண்டிருந்த அவருடைய மேற்படி அலுவலக ஜீப்பை அந்த வாகனத்திலிருந்த

வாகன ஓட்டுநர் திரு.ஆனந்தஜோதி என்பவர் மூலம் திறந்து, அந்த வாகனத்தை சோதனை செய்து, அந்த வாகனத்தின் நடுஇருக்கையிலிருந்த கைப்பையை (பேக்) எடுத்துக் கொண்டு, ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்திற்குள் வந்து அந்த பையை சோதனை செய்ய, அந்த கைப்பையின் நடுப்பகுதியில் ஆனந்தம் சில்க்ஸ் கடையின் துணிப்பை சுருட்டி மடிக்கப்பட்ட நிலையில் இருந்தது. அந்த துணிப்பையை வெளியே எடுத்து பிரித்து பார்க்க, அந்த பையினுள் கட்டுக்கட்டாக 500 ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ஐந்நூறு ரூபாய் நோட்டு கட்டுக்கள் மொத்தம் 12 கட்டுக்கள் இருந்தது. அந்த ஒவ்வொரு கட்டையும் எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ஒவ்வொரு கட்டிலும் தலா 100 எண்ணம் ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.6,00,000/- இருந்தது. அந்த பணம் பற்றி உதவி இயக்குநர் (ஊ) திரு.உமா சங்கர் அவர்களிடம் கேட்க, அந்த பணம் முழுவதும் அவருடைய மனைவியின் மருத்துவ சிகிச்சை செலவிற்காக அவருக்கு தெரிந்த வெவ்வேறு நெருங்கிய நண்பர்களிடம் வெவ்வேறு நாட்களில் பெற்று வைத்திருப்பதாகவும், இன்று (14.10.2022) திருநெல்வேலி வீட்டிற்கு போகும்போது, வீட்டிற்கு கொண்டு செல்வதற்காக வைத்திருந்ததாகவும் கூறினார். பின்னர் அவரிடம், தாங்கள் அந்த பணத்தை பெற்ற வெவ்வேறு நண்பர்களின் பெயரையும், எந்தெந்த நாட்களில் எந்தெந்த நண்பர்களிடம் எவ்வளவு பணம் பெற்றீர்கள் என்றும், அவர்களது தொலைபேசி எண்ணையும் சொல்லுங்கள் என்றும் கேட்க, அதற்கு அவர் அதெல்லாம் வேண்டாம் சார் என்றும், யாரிடமும் கேட்க வேண்டாம் சார் என்றும், அவர்களை விசாரிக்க வேண்டாம் என்றும் மழுப்பலாக பதில் கூறினார். மேலும் அந்த ரூ.6,00,000/- பணம் பற்றி மேற்படி ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவுகள் ஏதும் செய்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் பதிவு செய்யவில்லை சார் என்றும், முடிந்தால் என்னை இந்த பிரச்சனையிலிருந்து காப்பாத்துங்க சார் என்றும் சொன்னார். ஆகையால் அந்த ரூ.6,00,000/- பணம் அலுவலக ரீதியாக அவரை சந்திக்க வந்த பஞ்சாயத்து தலைவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சிகள் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் லஞ்சமாக/கிப்ட்டாக பெறப்பட்ட லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த பணம் வைத்திருந்த வெள்ளைநிற துணிப்பையில் ஆரஞ்சு நிறத்தில் கோடுகள் போட்ட பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் அழகாய்.. ஆனந்தமாய்... ஆனந்தம் சில்க்ஸ் இராமநாதபுரம் / கும்பகோணம் /தஞ்சாவூர் / இராஜபாளையம் / புதுக்கோட்டை என ஒருபக்கம் தமிழிலும், மற்றொரு பக்கம் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்ட அடையாளம் உள்ள துணிப்பையும் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து காலம்-5 வரிசை எண். 2ல் கண்ட திரு.ரா.சகேயு என்பவரை சோதனை செய்ய, அவரது மேல்சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.520/- இருந்தது. தொடர்ந்து அவரை சோதனை செய்ய, அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டிலும், இடதுபக்க பேண்ட் பாக்கெட்டிலும் கத்தையாக பணம் இருந்தது. அந்த கத்தையான பணத்தை எண்ணிப்பார்க்க, வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் 500 ரூபாய் நோட்டுக்கள் (ரூ.42,000/-) 84 எண்ணமும், இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் 500 ரூபாய் நோட்டுக்கள் (ரூ.5,000/-) 10 எண்ணமும் ஆக மொத்தம் ரூ.47,000/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர், அந்த பணத்தில் ரூ.42,000/- மட்டும் இன்று (14.10.2022) காலை

சுமார் 10.00 மணியளவில் உதவி இயக்குநர் திரு.உமா சங்கர் அவர்கள், அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தீபாவளி பண்டிகைக்கு டிரஸ் எடுத்துக் கொடுக்கச் சொல்லி கொடுத்த பணம் என்றும், அந்த பணத்தையும் சேர்த்து அலுவலகத்திலுள்ள ரொக்க கையிருப்பு பதிவேட்டில், உதவி இயக்குநர் திரு.உமா சங்கர் அவர்களின் உத்தரவின்பேரில் மேற்படி ரூ.47,520/- பணம் முழுவதும் தன்னுடைய கையிருப்பு பணம் என பதிவு செய்துள்ளேன் என்றும் கூறினார். உடன் மேற்படி கைப்பற்றப்பட்ட ரொக்க கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில், அந்த பதிவேட்டில் பக்கம் 11-ல் அவர் சொன்னதுபோலவே அவருடைய ரொக்க கையிருப்பு பணம் ரூ.47,520/- என்று பதிவு இருந்தது. ஆகையால் அவருடைய சொந்த பணம் ரூ.5,520/-ஐ திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம்-5 வரிசை எண்.1ல் கண்ட உதவி இயக்குநர் திரு.உமா சங்கர் அவர்களிடம், காலம்-5 வரிசை எண்.2ல் கண்ட உதவியாளர் திரு.சகேயு அவர்களிடம் கொடுத்த பணம் ரூ.42,000/- பற்றி கேட்க, அதற்கு அவர், உதவியாளர் திரு.சகேயு சொல்வதுபோல் ரூ.42,000/-ஐ என்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தீபாவளிக்கு டிரஸ் எடுத்துக் கொடுக்கச் சொல்லி நான்தான் இன்று காலை சுமார் 10.00 மணியளவில் கொடுத்தேன் என்றும், அதையும் சேர்த்து அலுவலக ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யும்படி கூறினேன் என்றும் கூறினார். மேலும் அந்த பணம் ரூ.42,000/- பற்றி உதவி இயக்குநர் (ஊ) திரு.உமா சங்கர் அவர்களிடம் கேட்க, அதற்கு முறையான கணக்கு காட்டாமல் மௌனமாக இருந்தார். அதனால் அந்த பணம் ரூ.42,000/- அலுவலக ரீதியாக உதவி இயக்குநர் (ஊ) திரு.உமா சங்கர் அவர்களை சந்திக்க வந்த பஞ்சாயத்து தலைவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சிகள் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் லஞ்சமாக/கிப்ட்டாக பெற்ற லஞ்சப்பணத்திலிருந்து திரு.சகேயுவிற்கு கொடுத்த பணமாக இருக்கலாம் என்றும், உதவி இயக்குநர் திரு.உமா சங்கர் அவர்களால் முறையாக கணக்கு காட்டப்பட முடியாத பணமாக கருதி ரூ.42,000/- பணமும் கைப்பற்றப்பட்டது. பின்னர் காலம்-5 வரிசை எண்.3ல் கண்ட அலுவலக உதவியாளர் திரு.நாகராஜ் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் ரூ.100/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர் அது அவருடைய சொந்த பணம் என்றும், இன்று (14.10.2022) அவருடைய சொந்த செலவிற்கு கொண்டு வந்த பணம் என்றும் சொன்னதால், மேற்படி ரொக்க கையிருப்பு பதிவேட்டை பார்வையிட ரூ.100/- அவரது பெயருக்கு நேரே எழுதப்பட்டிருந்தது. எனவே அந்த பணம் ரூ.100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஆக மொத்தம் இந்த திடீர் இணை ஆய்வு முடிவில் ரூ.6,50,000/- மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் காலம்-5ல் கண்ட 3 நபர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட்டன. இந்த திடீர் இணை ஆய்வு இன்று (14.10.2022) இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே இன்று (14.10.2022) எனது தலைமையில் விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்திலுள்ள கீழ்தளத்தில் தென்புறம் அமைந்துள்ள ஊரகவளர்ச்சித்துறை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அவர்களின் அறையில் திடீர் இணை ஆய்வு சோதனையின் போது ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமா சங்கர் மற்றும் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.சகேயு

ஆகியோரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத ரூ.6,50,000/- பணமானது ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ) அவர்களை அலுவலக ரீதியாக சந்திக்க வந்த பஞ்சாயத்து தலைவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கியதற்கும்/வழங்குவதற்கும், ஊரகவளர்ச்சிகள் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் உட்பட பலரிடம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் கிப்ட் மற்றும் லஞ்சப்பணமாக பெற்ற குற்றத்திற்காக வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கை, ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ந.உமா சங்கர், உதவியாளர் திரு.சகேயு மற்றும் அலுவலக உதவியாளர் திரு.நாகராஜ் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து, கைப்பற்றப்பட்ட பணம், அந்த பணம் இருந்த துணிப்பை மற்றும் ஆவணத்துடன் ஒப்படைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (எம்.முத்துமாரி), தனி வட்டாட்சியர், (ஆதிதிராவிடர் நலன்), ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், விருதுநகர் மாவட்டம் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். Sir, Received a complaint and registered a case in Virudhunagar V&AC Cr.No.05/2022 U/s 102 CrPC and 7 of PC (Amendment) Act 2018 on 15.10.2022 at 04.00 hrs. First Information Report (Original Copy) and complaint are submitted to the Hon'ble CJM cum Spl.Judge, Srivilliputhur and copies submitted to the concerned Officers. (sd). R.Boominathan, 15/10/2022, Insp of Police, V&AC VNR.

INSP OF POLICE,
V&AC, VNR.